ஸ்ரீ

ஸ்ரீராமஜெபம்.

# ஸ்ரீராமர் தோத்திரமாலை.




கே. வெ. துரைசாமி முதலியார்

அவர்களால்



சென்னை,

ஸ்ரீ ஆதிமூலம்பிரஸில்,

பதிப்பிக்கப்பட்டது.

1922,

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்,

# ஸ்ரீராமர் தோத்திர மாலை.

பூதலத்தையோரடி யளந்தரூபமானபொற்
பாததாமரைச்சரண்பணிந்துபூசைசெய்குவேன்
மாதவகோவிந்த அரிகேசவஅரிநாரணா
நாதகீதவேதமந்திர ராமராமராமனே. 1

சூகரத்தின்வடிவெடுத்த சுந்தராசவுந்தரா
ஏகலோகாநாயகா நீயெங்குமாய்நிறைந்தவா
மேகமாயளாவிநின்ற வேதஞானதேசிகா
நாகமீதில்மேவுகின்ற ராமராமராமனே. 2

காரணாதாமோதரா கரியநீலவர்னனே
பூரணாபயோதரா புராதனாநிராசனா
வாரணாதிமூலமென்ற போதுவந்தவாமனா
நாரணாயசோதைபுத்ர ராமராமராமனே. 3

வீரசிம்மஉக்ரமுற்ற விஜயமீறுதசரதன்
பாரில்மைந்தனாகவந்த பஞ்சவர்சகாயனே
பூரணாகிருபாகரா புதியதூணில்மந்துமுன்
நாரசிம்மரூபமான ராமராமராமனே 4

மாமனானகஞ்சனை வளைந்துகொண்டுவென்றவா
பூமியுண்டுமிழ்ந்தவா புகழ்ந்துபொன்னரங்கமே

வாமனானசொரூபனான வாசுதேவதேவனே
நாமமாயிரம்படைத்த ராமராமராமனே. 5

கோடிசூரியப்பிரகாச கொண்டல்மேகவண்ணனே
வாடிநொந்திடைந்திடாமல் வந்தருள்புரிந்தருள்
மேடியந்தகன்வெகுண்டு சீறிமோதியுன்னிடம்
நாடிவந்தபோதுகாரும் ராமராமராமனே. 6

பாவியென்றுபேர்கொடாதே பஞ்சபாதகங்களை
மேவிநூறுகுற்றமேசெய்தாலும் வந்தென்மெய்யினில்
காவலாகநீயிருந்து கருணைகொண்டுகாரையா
நாவினால்நிதந்துதிப்பேன் ராமராமராமனே. 7

தந்திதான்முன்னோலமென்ற போதுவந்ததீதமாம்
வந்துகாத்ததன்றபோல வந்துகார்ப்பதெந்தனாள்
செந்திருமணாளனான ஸ்ரீனிவாசநாதனே
நந்திசேகரன்றரித்த ராமராமராமனே. 8

மச்சரூபராகவா வராகரூபராகவா
கொச்சைஆயருக்குகந்த குன்றெடுத்துநின்றவா
பச்சைஆலினில்துயின்ற பச்சைநீலவர்ணனே
ரட்சகாஸ்ரீராகவா ராமராமராமனே. 9

தானஞ்செய்துமறிகிலேன் தவங்கள்செய்துமறிகிலே
ஆனவன்பரானபேர்க் கன்னமிட்டுமறிகிலேன் [ன்
தேனமர்ந்தமலர்கொண்டுன்னைச் சிந்தைசெய்துமறிகி
லேன், நானறிந்ததொன்றுமில்லைராமராமராமனே.()

கந்தன்மாதுலாவுயர்ந்த கருடகேதவாக்ஞ
சொந்தடுமையிவனுமென்று சூட்சபாதநல்கியே
யிந்தவேளிவந்துரட்சி யேகலோகநாயகா
நந்திகேசவாமுகுந்த ராமராமராமனே. 11

இல்லறத்தின்மாய்கையாலே யேங்கினேன்மயங்கியே
புல்லறிவுகொண்டுயானும்போற்றியான்பணிந்திலேன்
அல்லலற்றகாயமென் றறிந்துவந்துயென்னுளே
நல்லறிவுதந்துரட்சி ராமராமராமனே. 12

சங்குசக்ரரூபமான சரூபசிவஞாசகா
எங்குமாய்நிறைந்தவா யிலங்குமுன் நூல்மார்பனே
மங்குல்மேனியாயுலர்ந்த மகரகுண்டலாதிபா
ரெங்குநாயகாமுகுந்த ராமராமராமனே. 13

அம்புவேல்விழியின்னார்கள் ஆசைதன்வலைக்குளே
இம்பசாகரத்தழுந்தி யெண்ணமற்றவஞ்சகன்
வம்புகோடிசெய்திடினும் மாயனேபொறுத்திடீர்
நம்பினேனுனுன்னடிமை ராமராமராமனே. 14

ஆழமீதினில்துயின்ற அச்சுதாமுன்னாதியில்
ஏழுமாமரத்தையன்று மெய்துராவணாதிகள்
மாளவேசரந்தொடுத்த மாயனேமகிழ்ந்துயென்
னுளும்நீயுககந்துகாரும் ராமராமராமனே. 15

குற்றமென்பதுசெய்தாலுங் குலைகள்செய்திருக்கினும்
பெற்றதாய்விகா தமுண்டோபிள்ளைஎன்றுகொஞ்சங்க

அற்றதன்மைபாவனேனரியவேகுறைசெய்தாலுமென்
நற்றமிழ்க்குகந்துகாரும் ராமராமராமனே· 16

களபவாசனைமிகுந்த கரியமேகவர்னனே
துளபமாலிகைபுனைந்த சுருதிவேதநாயகா [ன்
உளமகிழ்ந்துகருணைகொண்டு உன்னடிமையென்றுதா
நளினதாமரைப்பத ராமராமராமனே 17

சிகரகோபுரஞ்சிறந்த செய்யவீதிசூழவே
மகரதோரணஞ்சிரப்ப வரிசைமண்டபங்களும்
பகரமுற்றகொடிகளும் பணிந்துதானயோத்திதன்
நகரவாசமாயிருந்த ராமராமராமனே, 18

வாசமாலிகைபுனைந்த மண்ணையுண்டவண்ணனே
கேசவாமுராரிதந்த கிருஷ்ணனேமனோகரா
தாசனென்றுபாததாமரைச் சரண்கொடுத்தருள்
ராசவெங்கடேசனான ராமராமராமனே. 19

கோவினிற்றுயின்றவா குருந்திலேறிநின்றவா
காலிகன்றுமேய்த்தவாமுன் கஞ்சனைவதைத்தவா
சாலநான்முகனையுந் தன்னிலேபடைத்துமே
நாலுவேதமும்புகழ்ந்த ராமராமராமனே. 20

தஞ்சமாவதேதுன்பாத தாமரைச்சரணனே
மிஞ்சவேறுதப்புமில்லை மேகநீலவண்ணனே
அஞ்சலஞ்சலென்றுகை யமர்த்தியாதரிப்பையோ
ரஞ்சிதப்பிரகாசனான ராமராமராமனே. 21

எண்ணும்அம்பரானபேரிடத்திருந்துவாழியே
புண்ணியநாமதேசிகா புவனரக்ஷகர்த்தனே
வண்ணனேலீலாவினோத வாசனேஎன்மலரடி
நண்ணினேன்வைகுந்தமேவும் ராமராமராமனே. 22

விருந்துசெய்யவேணுமென்ற விதுரன்மனையிலேகியே
யிருந்துமாய்கையாகவில் லிரண்டுதுண்டமாக்கினாய்
பொருந்துமாயமோமபக்ஷ புண்டரீகமாயனே
நருந்துளவமணிந்தரங்க ராமராமராமனே. 23

மாயவாமுன்பாரதப்போர் வந்துதோன்றும்நாளையில்
நேயமாயருச்சுனற்கு நின்றுதேர்ந்தூர்ந்தவா
ஆயனேஅனந்தமான ஆதிலட்சுமீயெனும்
நாயகிமணாளனை ராமராமராமனே. 24

சாடிசெய்துதுரியோதனன் சபையிலேதுரௌபதை
ஆடையென்றுரித்தபோது ஆதிமூலமென்றிட
வாடிநொந்திடைந்துசூது மணியெடுத்துருட்டையில்
நாடியொன்றுலட்சமென்ற ராமராமராமனே. 25

கச்சிலைஎனச்சபித்த கலிகைசாபத்தையும்
உச்சிதமதாகஉன் றுகந்துசாபநீக்கினாய்
அச்சானகிதன்னைமேவ ஆசைகொண்டுமிதுலையில்
நச்சிலைவளைத்துநின்ற ராமராமராமனே, 26

ஆவல்கொண்டுபாரிலே அலைந்துமேயலர்ந்துநின்
சேவடிக்காளாய்தாராத சென்மமென்னசென்மமோ

பாவகாரியென்றெண்ணுமல் பாதுகாத்தருள்புரி
நாவலர்க்குபாய்சுமந்த ராமராமராமனே, 27

ஏகவஸ்துவாகிநின்ற வெங்கரங்கநாயகா
சாகரத்தினிற்றுயின்ற சகஸ்திரநாமதேசிகா
ராமகர்ணுசவுந்தரா முராரிமோட்சகாரணு
காகவர்யனந்தசோக ராமராமராமனே. 28

சானகிமணுளனே தரணியையோரடியுமாய்
வானமோடளாவினின்ற வராகாவதாரனே
நமோநமோநாராயணு முகுந்தனந்தகேசவா
ஞானதேசிகப்பிரதாப ராமராமராமனே. 29

வேறு.

செப்பியே உந்திபூத்தோன் செங்கண்மால் பாதம் போற்றி, முப்பதும்படித்தோர்கேட்டோர்முற்றிலும் எழுதினேர்க்கு, தப்பிலாவரங்கள் தந்துசந்ததிகிளைபெற்றோங்க, இப்புவி தனிலேவாழ்ந்து எண்ணமற்றிருப்பர்தாமே.

## ஸ்ரீராமர் தோத்திரமாலை

முற்றிற்று.